# குழந்தைகளைக் கண்டிப்பது குற்றமா?

**Dr. Magesh Rajagopal (Psychiatrist)** அறம் மனநல மருத்துவமனை, திருச்சி

**Tamil Psychiatry Journal, Vol. I, Issue - 2, July - September 2025, Page 39 - 41**

பெற்றோர்களும், ஆசிரியர்களும் குழந்தைகளைக் கண்டிப்பதற்காக அவ்வப்போது அடிப்பது தவறல்ல என்ற எண்ணம் பெற்றோர்களிடமும், ஆசிரியர்களிடமும் காலம் காலமாக நிலவி வருகின்றது. இதனால், குழந்தைகள், சொல்பேச்சை கேட்காமல் இருந்தாலும், சிறு தவறுகள் செய்தாலும், அடித்துக் கண்டிப்பது என்பது வழக்கமாகியுள்ளது. “பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்”, ஐந்து முதல் பதினெட்டு வயதினரிடையே பதிமூன்று மாநிலங்களில், கிட்டத்தட்ட 12,500 குழந்தைகளிடம் ஆய்வு ஒன்றை நடத்தியது. அந்த ஆய்வில் சுமார் 65% குழந்தைகள் உடல் ரீதியான துன்புறுத்தலுக்கு ஆளாகியுள்ளதாக தெரியவந்துள்ளது. மேலும் இரண்டில் ஒரு குழந்தை மனரீதியான துன்புறுத்தலுக்கு பள்ளியில் ஆளாவதாகவும்; 5 வயது முதல் 12 வயதுடைய குழந்தைகள்தான் அதிகளவு பெரியவர்களால் துன்புறுத்தப்படுவதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

குழந்தைகளை அடிப்பவர்கள், “அடியாத மாடு படியாது” என்றும், “அடித்து வளர்க்காவிட்டால், அடங்க மாட்டார்கள்” என்றும் சிறுவர்களை அடிப்பதை நியாயப்படுத்துவார்கள். அவ்வாறு அடித்து வளர்ப்பது சரியா? அடிப்பதினால் என்னென்ன விளைவுகள் ஏற்படுகின்றன? அதற்கு மாற்று வழிகள் இருக்கின்றனவா என்பதை இக்கட்டுரையில் பார்ப்போம்.

ஐக்கிய நாடுகள் சபை, குழந்தைகளின் உரிமையையும், பாதுகாப்பையும் உறுதி செய்வதற்காக, தன் உறுப்பு நாடுகளுக்கு பல தீர்மானங்கள் மூலமாக இதை வலியுறுத்தி வருகிறது. ஆனால், இந்தியாவில் குழந்தைகளை அடிப்பது சட்டப்படி குற்றம் என்ற விதிகள் இருந்தாலும், அதை சரியாகப் பின்பற்றுவதில்லை என்று தான் சொல்ல வேண்டும்.

குழந்தைகள் தவறு செய்யும்போதெல்லாம், பள்ளியிலும், வீட்டிலும் பல்வேறு வகையில் தண்டிக்கப்படுகிறார்கள். இதை ஆங்கிலத்தில் Corporal Punishment என்று அழைக்கின்றோம். கிள்ளுவது, அறைவது, குச்சியால் அடிப்பது, கொட்டுவது, கையை மேலே தூக்கி நிற்கச் செய்வது, முட்டி போடச் செய்வது, சட்டையில்லாமல் ஓட விடுவது, கற்பனையாக நாற்காலியில்லாமல் உட்காரச் செய்வது, வெயிலில் பல மணி நேரம் நிற்கச் செய்வது, பெல்ட்டால் அடிப்பது போன்ற விதங்களில் பல வகையில் வீட்டிலும், பள்ளியிலும் பலவாறு உடல் ரீதியாக துன்புறுத்தப்படுகிறார்கள். இதே போல், திட்டுவது, தகாத பெயர்களைக் கொண்டு கூப்பிடுவது, மற்றவர்கள் முன்னால் தரக்குறைவாக பேசுவது, போன்ற முறைகளால் குழந்தைகள் அவமானப்படுத்தப்படுகிறார்கள்.

குழந்தைகளிடம் நடத்தப்பட்ட ஆய்வுவொன்றில் வன்முறையினால் குழந்தைளுக்கு மனரீதியாக ஏற்படும் விளைவுகளைப் பற்றி கண்டறியப்பட்டுள்ளது. அந்த ஆய்வில் பங்கேற்ற குழந்தைகளை இருவேறு பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொன்றாக தனி அறையில் பொம்மைகளோடு விளையாடச் செய்தனர். முதல் பிரிவு குழந்தைகளை ஒவ்வொன்றாக பொம்மை வைக்கப்பட்டுள்ள அறைக்கு அனுப்பி வைத்து விளையாடச் செய்தனர். அவ்வாறு அறைக்குள் சென்ற குழந்தைகள் அமைதியாகவும், ஆனந்தமாகவும் விளையாடுவதை கேமரா மூலம் கண்காணித்து கண்டறிந்தனர். இரண்டாவது பிரிவு குழந்தைகளை அறையில் வைக்கப்பட்டிருந்த பொம்மையோடு விளையாடுவதற்கு முன்பு, வன்முறை நிறைந்த காணொளி ஒன்றைக் காணச்செய்து பின்பு, அந்த பொம்மை இருக்கும் அறைக்கு அனுப்பி வைத்தனர். வன்முறைச் சம்பவத்தை காணொளியில் பார்த்த குழந்தைகள் பொம்மையை எட்டி உதைத்து விளையாடினார்கள்

என்று அந்த பரிசோதனை மூலம் நிரூபித்துள்ளனர் (3), இதன்மூலம், வன்முறையால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் பல்வேறு விதமான உளவியல் சார்ந்த பிரச்சனைகளால் பாதிப்புக்கு உள்ளாவார்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது.

குழந்தைகளை அடித்து வளர்ப்பதன் மூலம் வன்முறை தவறல்ல என்ற எண்ணம் தான் குழந்தைகளிடையே ஏற்படுகின்றது. அதனால், அவர்கள் தங்கள் எதிர்காலத்தில் அடுத்தவர்கள் மீது வன்முறையை பிரயோகிக்கவும் நேரிடும். நீண்ட நாட்கள் அடித்து வளர்க்கப்படும் குழந்தைகள் சமூக விரோதப் போக்குடன் வளர்வதற்கு அதிக வாய்ப்புள்ளதாக பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன (4). இதனால், பெற்றோர்களும், ஆசிரியர்களும் குழந்தைகளை அடிக்கக் கூடாது என்ற முடிவினை எடுத்துக் கொண்டு, அதனைப் பின்பற்றி நடத்தல் வேண்டும். குழந்தைகளை அடிப்பதினால் அவர்கள் ஆரம்ப காலகட்டங்களில் சற்று சொல்பேச்சைக் கேட்பது போல் தோன்றினாலும், அவ்வகையான அணுகுமுறை நீண்ட நாட்களுக்கு பலன் தராது. பெற்றோர்களும், ஆசிரியர்களும் அடிக்க ஆரம்பிக்கப் பழகினால், நாளடைவில் அப்பழக்கமானது கட்டுக்கடங்காமல் அதிகரித்துக் கொண்டேதான் போக நேரிடும் (5). உடல் ரீதியாக தண்டிக்கப்படும் குழந்தைகளுக்கு அதிகக் கோபமும், பழிவாங்கும் குணமும், எதிர்த்துப் பேசும் பழக்கமும், பெற்றோர் சொல்லுக்கு கட்டுப்படாமல் போகும் குணமும் அதிகரிக்கும். இதனால் அவர்கள் வளர்ந்த பிறகு பெற்றோர்களுக்கு எதிராக செயல்படுவது, பெற்றோர்களை பழிவாங்கும் நோக்கில் நடந்து கொள்வது போன்ற செயல்களில் ஈடுபடுவார்கள். பழி வாங்கும் வகையில் பெற்றோர்களையே அடித்து துன்புறுத்தும் வகையிலும் நடத்துகொள்வார்கள். கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் என்பது போல, சிறு வயதில் தமக்கு பயந்து நடந்து கொண்ட குழந்தை தற்போது தம்மை மதிக்காமல் விரோதமான மனப்பான்மையுடன் நடந்து கொள்கிறானே என்று நொந்து கொள்வதினால் பயன் ஏதுமில்லை. (6)

வாழ்க்கை என்பது பல பிரச்சனைகளும், சவால்களும் நிறைந்ததாகும். பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டு சமாளிக்கும் வழிமுறைகளை நாம் அனைவரும் கற்றுக் கொண்டு வந்தால்தான் நம்மை பக்குவப்பட்டவர்களாகவும், அனுபவமிக்கவர்களாகவும் மெருகேற்றிக் கொள்ள முடியும். ஆகையால், குழந்தைகளை அடித்து வளர்ப்பதின் மூலம் அவர்களுக்குப் பிரச்சனைகளை சமாளிக்கும் திறன் குறைந்திருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன(7).

குழந்தைகளுக்கு நல்ல சூழ்நிலை ஏற்படுத்திக் கொடுத்தால்தான், அவர்கள் மனநிறைவான, தன்னம்பிக்கை மிக்க, மனிதர்களாக வளர்ச்சி அடைவார்கள். குழந்தைகள் அடித்து துன்புறுத்தப்பட்டால், நாளடைவில் அவர்களுக்கு இயலாமை உணர்வு, தாழ்வு மனப்பான்மை, குறைந்த சுயமதிப்பீடு, மற்றவர்களோடு பழகும் ஆற்றலில் குறைபாடு போன்ற பிரச்சனைகள் ஏற்படக்கூடும் (8)(5). நீண்ட நாட்களாக அடித்து வளர்க்கப்படும் குழந்தைகள் நாளடைவில் அதிகம் பொய் சொல்லக் கூடியவர்களாகவும், மற்றவர்களை ஏமாற்றக் கூடியவர்களாகவும் மாறுவார்கள். மேலும், அவ்வாறு தவறுகள் செய்யும் போதுகூட அவர்களுக்கு அதைப் பற்றிய குற்ற உணர்வுகள் இருக்காது. மேலும் இவர்கள் பள்ளி விதிகளுக்கு கட்டுப்பட்டு நடந்து கொள்ளாமல், மற்ற மாணவர்களை மிரட்டுவது, துன்புறுத்துவது போன்ற செயல்களிலும் ஈடுபடுவார்கள் (7)(5).

பெற்றோர்களும், ஆசிரியர்களும் அடித்துக் கண்டித்தால்தான் குழந்தைகள் நன்றாகப் படிப்பார்கள் என்றும், வாழ்க்கையில் மேம்பட்டு திகழ்வார்கள் என்றும் நாம் தவறாக எண்ணிக் கொண்டு இருக்கின்றோம். ஆனால் உண்மை என்னவென்றால் துன்புறுத்தப்படுவதினால் குழந்தைகளுக்கு அறிவு வளர்ச்சியும், சிந்திக்கும் திறனும் வெகுவாக பாதிக்கப்படுவதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன. மேலும் அடித்துக் கண்டிப்பதினால் மதிப்பெண்கள் பள்ளிப்படிப்பின் போது அதிகரிப்பதில்லை என்றும் ஆராய்ச்சிகள் தெளிவுபடுத்துகின்றனர். அடித்து வளர்க்கப்படும் குழந்தைகள் எதிர்காலத்தில் தமக்கென்று குடும்பம், குழந்தை என்று ஏற்படும்போது தம் குழந்தைகள் மீதும், மனைவியின்/கணவனின் மீதும் வன்முறையை அதிகம் பயன்படுத்துவதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன (10).

**மாற்று வழிமுறைகள்:**

**1.** குழந்தைகளுக்கு நல்வழிகளை வார்த்தைகள் மூலம் சொல்லிக் கொடுப்பதற்கு பதிலாக முதலில் பெற்றோர்கள் நல்வழியில் நடந்து காட்ட வேண்டும்.

**2.** குழந்தைகளின் வயதிற்கு ஏற்றவாறு அவர்களுடைய பிரச்சனையைப் பற்றி பேசும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். ஏனென்றால், ஒவ்வொரு முறையும் பிரச்சனையைப் பற்றி நிதானமாக பேசும் போது குழந்தைகளின் சிந்திக்கும் திறனும், பிரச்சனைக்கான தீர்வுகாணும் ஆற்றலும் மேம்படும்.

**3.** குழந்தைகளை அடிப்பதற்கு பதிலாக, அவர்களுடைய வயதிற்கு ஏற்றவாரு சரியான கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும்.

**4.** நடத்தை விதிகளை மீறி நடக்கும் போது கோபத்தோடு செயல்படுவதை விடுத்து, அழுத்தமாகவும், கனிவாகவும், கண்டிப்புடனும் நடந்து கொண்டால், குழந்தைகள் தம் தவறுகளை உணர்ந்து நடத்து கொள்வார்கள்.

ஆசிரியர்களும், பெற்றோர்களும் Behaviour Modification Technique வழிமுறைகளின் அடிப்படையை நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். Behaviour Management என்றால், ஒரு குழந்தை தவறு செய்யும் போது, அதைத் தவறு என்று தெரியப்படுத்துவதற்கு, அந்தத் தவறிலுள்ள விளைவுகளைக் காட்ட வேண்டும். அதே போல் ஒரு குழந்தை, நல்ல பண்பை வெளிப்படுத்தும் போதெல்லாம் தகுந்தவாறு பாராட்டவும், பரிசு வழங்கவும் வேண்டும். அப்பொழுதுதான் நல்லப் பழக்கங்களை மேலும் மேலும் செய்வதோடு, தீயப்பழக்கங்களை நாளடைவில் குறைத்துக் கொண்டே வருவார்கள்.

**Reference:**


1. https://data.unicef.org/topic/child-protection/violence/violent-discipline/
2. Cohen, C. P. (1984). Freedom from corporal punishment: One of the human rights of children. New York Law School Human Rights Annual, Volume II, Part 1.
3. Fairchild L, Erwin WM. Physical punishment by parent figures as a model of aggressive behavior in children. JGenet Psychol1977;130:279-84 [Google Scholar] [Ref list)
4. Gunnoe, M. I., & Mariner, C. L. (1997). Toward a developmental-contextual model of the effects of parental spanking on children's aggression, Archives of Pediatric and Adolescent Medicine, 151, 768-775.
5. Straus, M. A. (1994). Beating the devil out of them: Corporal punishment in American families. San Francisco: New Lexington Press.
6. Brezina, T. (1998), Adolescent-to-parent violence as an adaptation to family strain: An empirical examination. Manuscript submitted for publication.
7. Gelles, R. J., & Edfeldt, A.W. (1986), Violence toward children in the United States and Sweden. Child Abuse and Neglect, 10, 501-510.
8. Sternberg, K. J., Lamb, M. E., Greenbaum, C. D., Dawud, S., Cortes, R. M., Krispin, O., & Lorey, F. (1993). Effect of domestic violence on children's behavior problems and depression. Developmental Psychology, 29, 44-52.
9. Straus, M. A., & Paschall, M. J. (1998). Corporal punishment by mothers and child's cognitive development: A longitudinal study. Paper presented at the 14th world conference of sociology, Montreal, Quebec, Canada. Durham, NH: Family Research Laboratory, University of New Hampshire.
10. Julian, T. W., & McKenry, P. C. (1993). Mediators of male violence toward female intimates. Journal of Family Violence, 8, 39-56.